2020 A/L

PAPER CLASS

அலகு 05

அரச மாதிரிகள்

பகுதி 01

அரசு	இயல்புகள்
தாராண்மை வாதம் பாசிசம் சோசலிசம்	A. அரசு இறுதியில் அற்றுவிடும். B. பொது நலனுக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட சங்கமே அரசு ஆகும். C. தனிப்பட்டவர்களின் சுதந்திரம் மிகவும் உயர்வானது. D. சமத்துவம் என்ற சிந்தனை ஏற்றுக்கொள்ளமுடியாது. E. அரசு ஒரு வர்க்கக் கருவியாகும். F. தனிப்பட்டவர்கள் அரசின் நலன்களுக்கு சேவை செய்தல். G. ஒரு சமூக ஒப்பந்தத்தில், வெளிப்பாடே அரசாகும். H. தேசத்தினையும் போரினையும் புகழ்வது I. ஒவ்வொருவருக்கும் அவரது திறமைக்கேற்ப ஒவ்வொருவருக்கும் அவரது தேவைகளுக்கேற்ப

01. தாராண்மைக் அரசுக்கு மிகவும் பொருத்தமான இயல்புகளை கொண்டிருக்கும் சேர்மானம் எது?

1. A B C 2. D E F 3. G H A 4. B C G

02. சோசலிசக் அரசுக்கு மிகவும் பொருத்தமான இயல்புகளைக் கொண்டிருக்கும் சேர்மானம் எது?

1. A B C 2. B C D 3. A E I 4. G H I

03. பாசிசக் அரசுக்கு மிகவும் பொருத்தமான இயல்புகளைக் கொண்டிருக்கும் சேர்மானம் எது?

1. C D H 2. D F G 3. D G H 4. A D F

04. தாராண்மை அரசுக்கு தொடர்பான இயல்புகளைச் சரியாக வெளிப்படுத்தும் கூற்றுக்கான இனங்காண்க.

A. தாராண்மை வாதத்தின் எழுச்சியும் முதலாளித்துவத்தின் வளர்ச்சியும் பரஸ்பரம் தொடர்புடையன.
B. தாராண்மை வாதத்தின் தனிப்பட்டவர் மத்திய மயமான இடத்தைப் பெறுகிறார்.
C. தாராண்மை வாதம் பலமான அரசாங்கத்தினை விரும்புகிறது.
D. கால ஓட்டத்தில் சிந்தனைகளின் தொகுதி என்ற அளவில் தாராண்மை வாதம் மிகவும் தீவிரமான மாற்றங்களுக்குட்பட்டுள்ளது.

1. A, B 2. B, C 3. C, D 4. D, A 5. வேறு

05. ஆரம்ப தேசிய அரசுகளுடன் தொடர்புடைய சேர்மானத்தை இனங்காண்க.

A. ஒரு தேசியத்துக்காக ஒரு அரசு என்பதை இது குறித்துக் காட்டியது.
B. மானியமுறை வீழ்ச்சியுற்றமை இதன் தோற்றத்துக்கு வழிசமைத்தது.
C. ரோமன் கத்தோலிக்க திருச்சபை அதன் வளர்ச்சிக்கு துணைநின்றது.
D. போடின், குரோஷியன் ஆகியோரின் கோட்பாடுகள் அதனை நியாயப்படுத்தியது.

1. A B C 2. B C D 3. C D A 4. B D A

www.lkedu.lk K.SUMAL

06. **'நரமாமிசம் உண்போர் சமூகத்திலே மனிதனைத் உண்பதற்கெதிரான சட்டமொன்று இருக்கமுடியாது" இம்மேற்கோள் வலியுறுத்துவதாவது.**

1. சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் மனிதனை உண்பதற்கெதிராக போராட வேண்டும்.
2. கெட்ட பழக்கங்களுக்கு மத்தியிலும் மக்கள் ஒன்று பட்டு சமூகத்தின் நன்மைக்காக உழைக்க வேண்டும்.
3. ஒரு சமூகத்தின் சட்டங்கள் அச்சமூகத்தின் விழுமியங்களைப் பிரதிபலித்துக்காட்டும்.
4. தமது சொந்தப் பாதுகாப்பின் மீது தனியாட்கள் கவனமெடுக்க வேண்டும்.

07. பின்வருவனவற்றுள் அரசின் ஆரம்ப தாராண்மை வாதத்துடன் குறைந்த உடன்பாடுடைய கூற்று எது?

1. குறைந்தபட்சமாக ஆளுகின்ற அரசே சிறந்த அரசாகும்.
2. மக்கள் தமது சொந்த விவகாரங்களைத் தாமே செய்வதற்குரிய அனுமதியை அரசு வழங்க வேண்டும்.
3. உடன் இலாபம் தரும் வர்த்தக முயற்சிகளில் மாத்திரம் அரசு முதலிடவேண்டும்.
4. சட்டம், ஒழுங்கு என்பவற்றை நிலைநாட்டுவது அரசின் பொறுப்பாகும்.

08. அரசின் சோசலிச அரசுக்கு விளக்கும் மிகவும் பொருத்தமான சேர்மானத்தை இனங்காண்க.

A. அரச அதிகாரம் என்பது பொருளாதார அதிகாரத்துடன் நேரடியாக சம்பந்தப்பட்ட ஒன்றாகும்.
B. பொதுவுடைமை சமூகமொன்றில் அரசானது பாட்டாளி மக்களின் கைகளில் இருக்கும்.
C. பொருளாதார அதிகாரத்தை சிறுபான்மை வைத்திருக்கும் வரைக்கும் அரசு அவசியமானது.
D. அரச ஒரு நலன்புரி ஒழுங்கமைப்பல்ல.

1. A B C 2. B C D 3. C A D 4. A B D

09. பாசிச அரசிற்குரித்தான சரியான சேர்மானக் கூற்றுகளை இனங்காண்க.

A. அரசின் அதிகாரத்தை வலுப்படுத்த வேண்டியது ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.
B. அரசுடன் இனங்காணப்படுவதனாலே தனியாள் தனது சிறப்பினை உணர்கின்றான்.
C. தனிநபருக்கும், சமூகத்துக்கம் உகந்தது எதுவென்பது அரசுக்கும் தெரியும்.
D. பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிட மாட்டாது.

1. A B C 2. A D C 3. D C A 4. C A B

10. ஆரம்ப தேசிய அரசுக்குப் பொருத்தமற்ற கூற்றினை அடையாளம் காண்க.

1. அதன் எழுச்சியை புரட்டஸ்தாந்து சீர்திருத்தம் இயலுமானதாக்கியது.
2. தேசிய அரசுகளின் வளர்ச்சி அரசர்களைப் பலவீனப்படுத்தியது.
3. சிறிய பலவீனமான தேசிய இனவாதங்களை முறியடிப்பதற்கு அது வழிவகுத்தது.
4. அதனைப் பலப்படுத்துவதற்கு வர்த்தக வாதமும் முதலாளித்துவமும் பங்காற்றின.

11. அரசின் இயல்பு சரியாகப் பொருந்துகின்றது அரசு மாதிரியை அடையாளம் காண்க.

1. நில பிரபுத்துவ ஆதிக்கம் - மானியமுறை அரசு
2. போட்டிக் கட்சி முறை – சோசலிஷ அரசு
3. பாட்டாளிகள் அதிகாரம் - பாசிச அரசு
4. அரசின் புகழ் பாடுதல் - தாராண்மை ஜனநாயக அரசு

12. பாசிச அரசுக்குப் பொருத்தமான சேர்மானமான கூற்றுக்களை அடையாளம் காண்க.

A. சமூத்தினை இராணுவ மயமாக்கல்.
B. தனியார் சொத்துரிமையினை ஏற்றல்.
C. தலைவர்களுக்கு மேன்மையான இடம் வழங்குதல்.
D. சட்டத்தின் ஆட்சி நிலவுதல்.

1. A B C 2. B C D 3. C D A 4. D A B

www.kedoK.S.SIMAL

13. சோசலிஷ அரசுக்குப் பொருத்தமான சேர்மானமான கூற்றுக்களை அடையாளம் காண்க.

A. தனிப்பட்டவரின் நன்மைக்கு மேல் கூட்டு நன்மையை வைத்தல்.
B. உற்பத்திக் கருவிகளைப் பொதுவாக வைத்திருத்தல்.
C. பல்கட்சி போட்டி அரசியல்
D. பொருளாதாரத்தில் அரச ஆதிக்கம்.

1. A B C 2. B C D 3. C D A 4. D A B

14. தாராண்மை ஜனநாயக அரசுக்கு பெறுமதியான சேர்மானக் கூற்றுக்களை அடையாளம் காண்க.

A. தடைகளற்ற வியாபார வர்த்தகமும் கைத்தொழிலும்
B. பொருளாதாரத்தில் அரசின் ஆகக் குறைந்த தலையீடு
C. அமுக்கக் குழுக்களின் கட்டுப்பாடு
D. யாப்பினுள் அமைந்த அரசாங்கம்.

1. A B C 2. B C D 3. C D A 4. D A B

15. ஒரு தேசிய அரசுக்கும் பொருதத்தமான கூற்றினை இனங்காண்க.

1. தேசிய அரசு முதலில் பத்தாம் நூற்றாண்டில் எழுச்சியடைந்தது.
2. இறைமை என்ற எண்ணக்கரு அதனைப் பலப்படுத்தியது.
3. ஒவ்வொரு இனத்துவக் குழுவும் தனக்கென வேறான அரசைக் கொண்டிருந்தது.
4. அது நிலப்பிரபுத்துவ அதிகாரம் எழுச்சி பெற வழிவகுத்தது.

16. அரசின் இயல்போடு சரியாக ஒத்துப்போகும் வரிசையை இனங்காண்க.

1. நிலப்பிரபுத்துவ ஆதிக்கம் - பாசிஸம்
2. இன முதன்மை நிலை – சோசஸிசம்.
3. தனிமனிதவாதம் - தாராண்மை ஜனநாயகம்.
4. ஒரு கட்சிச் சர்வாதிகாரம் - மானிய முறைமை.

17. பிரபல்யமான கூற்றுகள் சில தரப்பட்டுள்ளன. எந்த வரிசை கூற்றையும் ஆசிரியரையும் சரியாகத் தொடர்புபடுத்துகின்றது.

1. நானே அரசு – கார்ல் மார்க்ஸ்
2. உரிமைகளின்றிச் சுதந்திரமில்லை - ஹரல்ட்லஸ்கி
3. அரசு ஒரு வர்க்க கருவி – ஐக்கிய அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனம்
4. எல்லா மனிதரும் சமமாகப் படைக்கப்பட்டுள்ளனர். xivஆம் லூயி

18. தாராண்மைவாதத்திற்குப் பொருத்தமான சேர்மானத்தை இனங்காண்க.

A. தாராண்மைவாதத்தின் தோற்றம் மானிய முறையின் வீழ்ச்சியோடு இணைந்ததாகும்.
B. தாராண்மைவாதத்திற்கான விதைகளைப் புரட்டஸ்தாந்தும் தூவியது.
C. ஆரம்பத் தாராண்மைவாதம் சமூகநலனுக்காகப் பிரசாரம் செய்தது.
D. அது முதலாளித்துவத்துடன் இணைந்திருந்தது.

1. A B C 2. B C D 3. C D A 4. D A B

19. பாசிசத்துக்குப் பொருத்தமான சேர்மானத்தை இனங்காண்க.

A. அரசுக்கு அடிபணிவதன் மூலம் தனிமனித சுதந்திரம் உறுதிப்படுத்தப்படுகிறது.
B. ஒரு தலைவரால் வழிநடத்தப்படும்போதே சமூகம் அர்த்தமுடையதாகின்றது.
C. ஆண்கள் இயல்பாகவே பெண்களை விட உயர்வானவர்கள்.
D. பெரும்பான்மையினரின் விருப்பினை அரசாங்கம் கட்டாயம் பிரதிபலிக்க வேண்டும்.

1. A B C 2. B C D 3. C D A 4. D A B

www.kalvi.lk K.S.NIMAL

20. சோசலிஸத்துக்குப் பொருத்தமான சேர்மானத்தை இனங்காண்க.

A. சோசலிஸம் தனிப்பட்டவர்களைவிட சமூகத்தை முக்கியத்துவப்படுத்துகிறது.
B. சோசலிஸ அரசு பொருளாதாரத்தில் தலையீடுவதில்லை.
C. சோசலிஸத்தின் கீழ் தனியார் முயற்சி அதைரியப்படுத்தப்படுகிறது.
D. சோசலிஸம் சமத்துவத்திற்கு முன்னுரிமை வழங்குகிறது.

1. A B C 2. B C D 3. C D A 4. D A B

21. நகர அரசு முறைமைக்குப் பொருத்தமான சேர்மானத்தை இனங்காண்க.

A. நகர அரசுகள் நேரடி ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன.
B. நகர அரசில் வாழ்ந்த சகலரும் அரசியல் உரிமைகளைப் பெற்றனர்.
C. பிரஜைகள் மட்டுமே அரசியல் செயன்முறையில் பங்குபற்ற அனுமதிக்கப்பட்டனர்.
D. அரசாங்கச் செயற்பாடுகள் பணிசார் அடிப்படையில் பிரிக்கப்படவில்லை.

1. A B C 2. A B D 3. B C D 4. A C D

22. தேசிய அரசுகளுக்குப் பொருத்தமான சரியான சேர்மானத்தை தெரிவு செய்க.

A. தேசிய அரசுகளை உருவாக்கும் கூறுகள் நிலம், மக்கள் தொகை, அரசாங்கம், இறைமை ஆகியனவாகும்.
B. தேசிய அரசுகள் ஒரு தேசம் ஒரு நாடு என்ற தத்துவத்தின் அடிப்படையில் உருவாகியுள்ளன.
C. நிலம், மக்கள் தொகை, அதிகாரம் என்பவற்றில் எவ் வேறுபாடுகள் இருப்பினும் சகல தேசிய அரசுகளும் சமனானவையாக கருதப்படுகின்றன.
D. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உறுப்புரிமையைப் பெற்ற அரசுகள் மட்டுமே தேசிய அரசுகள் எனக் கருதப்படுகின்றன.

www.lkedu.lk K.S NIMAL

1. A B C 2. A B D 3. B C D 4. A C D

23. அரசு பற்றிய தாராண்மைவாதக் கோட்பாட்டுக்குப் பொருத்தமான சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

A. அரசு மனிதரால் தாபிக்கப்பட்ட ஒரு சமூக நிறுவனமாகும்.
B. அரசு மனிதரின் விருப்புக்கு எதிராக செயற்படும் போது அதனைக் கலைத்து விடலாம்.
C. அரசின் பிரதான நோக்கம் பொது நன்மையை மேம்படுத்துவதாகும்.
D. அரசு மனித முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமாகிறது.

1. A B C 2. A B D 3. B C D 4. A C D

24. புராதன கிரேக்க நகர அரசுகளுக்குப் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.

A. பிரசைகள் அரச விவகாரங்களில் நேரடியாகவே பங்குபற்றினர்.
B. பெண்களும் வெளிநாட்டவர்களும் அடிமைகளும் பிரஜாவுரிமையைப் பெறவில்லை.
C. நீதிபதிகளும் அதிகாரிகளும் பிரசைகள் மன்றுகளுக்குப் பொறுப்புக் கூறினர்.
D. தற்கால அரசுகளில் போன்று அரசச் செயற்பாடுகள் தெளிவாக வேறுபடுத்தப்பட்டிருந்தன.

1. A B C 2. B C D 3. C D A 4. D A B

25. தேசிய அரசுகளின் தோற்றத்துக்குப் பொருத்தமான சேர்மானத்தைக் தெரிவு செய்க.

A. கத்தோலிக்கத் திருச்சபையின் அதிகாரத்தின் வீழ்ச்சி
B. புரட்டஸ்தாந்து சீர்திருத்த இயக்கம்.
C. அரசர்களின் தெய்வீக உரிமைக் கோட்பாடு
D. மானிய முறையின் வீழ்ச்சி

1. A B C 2. B C D 3. C D A 4. D A B

26. நவீன அரசுகளின் அரசியல் அதிகாரத்தின் தளம் - பொருத்தமற்ற கூற்று

1. அரசியல் உயர்குழாம் வகுப்பின் அதிகாரமாகும்.
2. மக்களின் பொதுச் சித்தமாகும்.
3. மக்களின் பொது ஏற்பாகும்.
4. மக்களினால் ஏற்றுக் கொள்ளப்படும் சட்டமுறைத் தன்மையாகும்.

27. தேசிய அரசின் தோற்றத்துக்குப் பங்காற்றிய காரணிகளாவன – பொருத்தமற்ற கூற்று

1. மறுமலர்ச்சி மற்றும் மதச் சீர்திருத்த இயக்கங்கள்
2. மானிய முறையின் வீழ்ச்சி
3. 16ஆம் நூற்றாண்டு ஐரோப்பாவில் பரவிய ஜனநாயக விழுமியங்கள்
4. ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற தேசிய உணர்வுகள்

28. அரசின் தோற்றமானது.

A. தெய்வீக உரிமைவாதத்தின் படி கடவுளின் படைப்பாகும்.
B. சமூக ஒப்பந்தவாதத்தின் படி சமூக ஒப்பந்தத்தின் விளைவினதாகும்
C. தாராளவாதத்தின் படி பொது நன்மைக்காக மக்களால் தோற்றுவிக்கப்பட்டதாகும்.
D. மாக்சீயவாதத்தின் படி தனியார் சொத்துடைமையின் தோற்றத்தின் விளைவினதாகும்.
E. பாசிசவாதத்தின் படி நீண்ட சமூகப் படிமுறை வளர்ச்சியின் விளைவினதாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

29. தேசிய அரசின் பிரதான பண்புகளாவன:

A. சட்டமுறையின் அடிப்படையில் ஆணை அதிகாரத்தைப் பயன்படுத்தி கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ள திறன்.
B. உயரியதும் தனிமுதன்மையானதுமான அதிகாரத்தின் தனியுரிமை உரித்து
C. அன்றாட வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பயன்படுத்தும் நிர்வாக இயந்திரம்
D. ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளைப் புரிவதற்குத் தாராள ஜனநாயக அரசாங்க முறையை மட்டுமே பயன்படுத்துதல்.
E. சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பையும் நடைமுறைப்படுத்துவதற்குப் பொலீசையும் ஆயுதப்படைகளையும் கொண்டு நடத்துதல்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

30. தேசிய அரசு என்பது:

A. கலாசார வேற்றுமையையும் அரசியல் ஒற்றுமையின்மையையும் பாதுகாக்கும் ஓர் அரசு முறைமை எனப் பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
B. குடியுரிமையினதும் தேசியத்துவத்தினதும் அரசியல் பிணைப்பின் அடிப்படையில் தாபிக்கப்பட்ட தன்னாட்சி அரசியல் சமூகமாக உள்ளது.
C. பல்தேசப் பேரரசுகளுக்கும் நகர அரசுகளுக்கும் எதிராக 16ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒரு மாற்று அரசு முறைமையாக உள்ளது.
D. ''ஒவ்வொரு தேசமும் ஓர் அரசு மற்றும் முழுத் தேசத்துக்கும் ஓர் அரசு'' என்ற மூலக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது.
E. சர்வதேச அரசியலின் அடிப்படைக் கூறாகும் என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

31. கோத்திர அரசு என்பது

A. பலம் பொருந்திய ஆட்சியாளர்களால் தீர்மானங்கள் எடுக்கப்படும் குழுக்கள் தோற்றம் பெற்றதும் தோன்றிய ஆரம்ப அரசாகும்
B. குலங்கள் அல்லது குடிகள் மத்தியில் பாரிய மோதல்களையும் முரன்பாடுகளையும் உருவாக்கும் தன்மையுடையது
C. தலைமைத்துவம் என்பது பரம்பரை ரீதியாகத் தெரிவு செய்யப்படும்

www.kalvi.lk K.SHIMAL

D. பெரும்பாலன தலைமைத்துவம் ஆண்களின் வழிகாட்டல்களின் கழீ இருந்தமை குறிப்பிடத் தக்கது
E. தென்னாபிரிக்கா,சிம்பாவே,உகாண்டா போன்ற நாடுகளில் இவ்வரசின் ஆரம்பத்தைக் காணலாம்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

32. பாஸிச அரசானது

A. அரசின் உயரிய தன்மை,ஏதேச்சதிகாரம்,இராணுவவாதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கருத்தியலாகும்
B. முதலில் 1920,1930 களில் இத்தாலி மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகளில் உதயமானது
C. ''அரசு நிகரற்ற தாபனம்'' என்பதுடன் ''சர்வவல்லமை படைத்த தாபனம்'' எனவும் சிறப்பித்துக் கூறுகின்றது
D. ''அரசுக்காக மக்கள்'' அன்றி ''மக்களுக்காக அரசு'' ஏனும் மூலக்கொள்கைளின் அடிப்படையில் செயற்படுவது அலசின் கடமையாகும்
E. ''நம்பு,கீழ்ப்படி,போர்புரி'' என்பதே பாஸிச கருத்தியலின் தாரக மந்திரமாகும்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

33. கிரேக்க நகர அரசு

A. கிரேக்க தேசத்தின் பிரதான நகரங்களை மையமாகக் கொணடு தோற்றம் பெற்ற அரசாகும்
B. நிலப்பிரபுக்கள்,சுதந்திரவாசிகள்,அடிமைகள் எனும் சமூகப்பிரிவினைகளைக் கொண்ட அரசாகும்
C. அனைத்து மக்களும் அரசியல் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டு தமது அரசியல் அக்கத்திறனை விருத்தி செய்து கொண்டனர்
D. அரசுகள் ஒவ்வொன்றும் சுயாதீனத் தன்மையுடன் செயற்பட்டன
E. மக்கள் நேரடியாக பங்கு கொள்ளத்தக்க நேரடி ஜனநாயக ஏற்பாடுகளை அரசு அமைத்துக் கொடுத்தன

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

34. முடியாட்சி அரசின் பிரதான் இயல்பகளாவன

A. அனைத்து அதிகாரங்களும் தனிநபரிடம் குவிக்கப்பட்டிருக்கும்
B. பிரித்தானியா இவ்வரசின் தாயகமாக விளங்குகின்றது
C. பரம்பரை ரீதியிலான தலமைத்துவம் வழங்கப்படுதல்
D. மக்களின் பொதுச் சித்தம் சட்டங்களதக வடிக்கப்படும்
E. காலதாமதத்தை தவிர்த்து வினைதிறனான ஆட்சியை நிலைநாட்டுகிறது

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

35. பாசிச அரசின் பிரதான பண்புகள்

A. தனி மனிதனின் சர்வாதிகார ஆட்சி முறை நிலவுதல்
B. ஒரு தனிக்கட்சியின் ஆதிக்கம் நிலவுதல்
C. நிலையான அரசியல் கொருளாதார கொள்கைகளை கொண்ட அரசாங்கமுறைமை
D. சட்டவாட்சி,நீதித்துறை சுதந்திரம் தவிர்க்கப்பட்ட ஆட்சி
E. தேசியவாதமும் சந்தர்ப்பவாதமும் நிறைந்த ஆட்சி முறை

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE

www.lkedu.lk K.S.NIMAL